முருகப்பெருமான் துணை

**மகான் வியாசமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

10.11.2021, புதன்கிழமை

1. வள்ளலே வடிவேலன் அம்சமே
வரம் தந்து கலியுக மக்களின்
இல்லாமை போக்கவந்த ஞானியே
ஏழாம்படை வீட்டின் தவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தரணியில் உன்பெருமை கூறி
அவனியில் வியாசமுனிவர் யானும்
அருளுவேன் பிலவ துலை திங்கள்
3. திங்களிலே அறுநான்கு திகதி புந்தி வாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 24ம் நாள், 10.11.2021 புதன்கிழமை)
தேசிகனுக்கு துல்லிய ஆசி உரைப்பேன்
ஓங்கார மெய்ப்பொருள் அறியவே
ஓங்கார குடிலை நோக்கி வர
4. வருகவே உள்ளொளி தெளிவும்
வரமாக தயவுடன் சிறப்பும்
ஆறுமுகன் அருளால் கிட்டும்
ஆனந்தப் பெருவாழ்வு காண்கும்
5. காண்கவே குருவாக அரங்கனை
கண்டு வணங்கித் தொடரவே
உண்மை ஞானம் சன்மார்க்கம்
உயிர்கொலை நீக்கி வாழும்
6. வாழுகின்ற அரங்கன் வழிதனை
வணங்கி வழிமொழிந்து உலகோர்
நாளும் ஞானிகள் பூசையாக
நாட்டிடுவேன் செய்து வருக
7. வருகவே ஓங்கார சக்தியும்
வல்லமையாக உலிகில் பரவி
முருகப் பெருமான் தலைமையும்
முழுமைஞான ஆட்சிக் காலமாக மாறும்
8. மாறுதலும் நல்ல தேற்றமும்
மக்களிடை வழங்கி உயர்த்த
ஆறுமுக அரங்கமகானும்
அன்னதான சேவை துவக்கி
9. துவக்கி அருளமுதாக்கித் தர
தேடிவந்து அமுதை உண்டுமே
அவதார ஞானி அறத்தின் பால்
அனைவரும் பொருளுதவி செய்து

10. செய்துமே சேவை பெருக்கிவர
சிறப்பான மாற்றம் கண்டு
மெய்ஞான பலம் மிக்கவர்களாக
முழுமை ஞானிகளாக உருவாகி

11. ஆகியே உலகமாற்றம் தானும்
அரங்கன் தருமத்தால் அகிலத்தார்
மகிழவே கண்டு தேற்றம் காணும்
மொழிந்திட்ட துல்லிய ஆசி முற்றே

–சுபம்–